Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 139

சனிக்கிழமை
13 ஏப்ரல் 2024

பங்குனி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"குரோதி
வருசத்திலையாவது
குரோதமெல்லாம் ஒழிஞ்சால்
எல்லோருக்கும் நல்லது
கண்டியளோ"

வாசகர்கள், விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
'உதயனின்' சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்து!



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை

# ஜூன் மாத அமர்வில் இலங்கைக்கு சிக்கல்

## மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்ரல் 13**

**இலங்கை அரசாங்கம் மன்னிப்புச்சபையின் அறிக்கை தொடர்பான உரிய விளக்கங்களை வழங்காவிட்டால் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் சிக்கல்களை எதிர்கொள்ளும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.**

15

## இன்று இரவு 8.15 மணிக்கு

## பிறக்கின்றது குரோதி வருடம்!

யாழ்ப்பாணம், ஏப். 13

குரோதி புத்தாண்டு இன்று இரவு 8.15 மணியளவில் பிறக்கின்றது. புத்தாண்டை முன்னிட்டு, மாலை 4.15 மணி தொடக்கம் இரவு 12.15 மணிவரையான புண்ணியகாலத்தில் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து கொள்ளலாம்.

**கைவிசேட நேரம்**

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.57 மணிமுதல் காலை 9.56 மணி வரையும், காலை 9.59 மணிமுதல் பிற்பகல் 12.01 மணிவரையும், மாலை 6.17 மணிமுதல் இரவு 8.17 மணிவரையும், நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.08 மணிமுதல் காலை 9.51 மணி வரையும், காலை 9.55 மணிமுதல் மு.ப. 10.30 மணி வரையும் கைவிசேட நேரங்களாக அமைந்துள்ளன. (ம)

## பொதுவேட்பாளர் காலத்தேவையே

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா வலியுறுத்து



கொழும்பு, ஏப். 13

தமிழ்ப்பொதுவேட்பாளர் என்பது தொடர்பில் தற்போது அதிகம் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய அரசியல், பொருளாதார

15

## தீப்பற்றி எரிவடைந்து குடும்பப்பெண் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

மண்ணெண்ணெய் அடுப்பு வீழ்ந்து பற்றி எரிந்ததில், தீக்காயங்களுடன் சேர்க்கப்பட்ட பெண்ணொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த சுபனேந்திரன் இலங்கேஸ்வரி (வயது -39) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

15

## ஆழ்துளைக் கிணறுகளால் நிலத்தடி நீருக்கு ஆபத்து!

வவுனியா, ஏப். 13

வவுனியாவில் அதிகமான ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதால் மாவட்டத்தின் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சூழலியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

15

## வடக்கில் மழைக்கு சாத்தியம்

யாழ்ப்பாணம், ஏப். 13

வடமாகாணத்தில் இன்று மழையுடனான காலநிலை நிலவலாம் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மேல், தெற்கு, சப்ரகமுவ, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் மாலை அல்லது இரவுவேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

15

ஆதிலிங்கேஸ்வரரின் நிர்வாகத் தெரிவு

## அழையாத இடத்துக்குள் அத்துமீறிய சிவசேனை!


### எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வெளிநடப்பு

வவுனியா, ஏப். 13

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவும், பொதுக்கட்டமைப்பு உருவாக்கமும் நேற்று இடம்பெறவிருந்த நிலையில், அதைக் குழப்பும்வகையில், கூட்டத்தில் சிவசேனை அமைப்பு நடந்துகொண்டமையால் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பொதுக்

15



கோப்பாயில் விபத்து;

## தென்மராட்சிக் கல்வி வலய ஆலோசனை அதிகாரி பலி



யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணம் - கோப்பாய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், தென்மராட்சி வலயத் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரியான கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் (வயது-56) என்பவர் உயிரிழந்தார்.

பாடசாலை ஒன்றில் இடம்

15

## மீண்டும் கொரோனா நேற்று ஒருவர் சாவு

கொழும்பு, ஏப். 13

கொரோனாத் தொற்றுக்கு உட்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுவந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் உயிரிழந்த நிலையில், அவருக்கு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 13

உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் மாலை உடுவில் மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள கழக வளாகத்தில் கழகத்தின் தலைவர் பிரதாபன் தலைமையில் வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

வெள்ளி விழாவை சிறப்பிக்குமுகமாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. 25 வருடங்களாகக் கழகத்தின் வளர்ச்சிப் பாதையில் பணியாற்றியவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவுடன் நிகழ்வு முடிவடைந்தது. பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், கௌரவ விருந்தினராக கழக மைதான உரிமையாளர் மகேந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், உடுவில் மத்தி வடக்கு கிராம அலுவலர், விளையாட்டு கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஓ-125)

# பொலிஸாருக்குப் பரிசு



கொழும்பு, ஏப். 13

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தலுக்கமைய மதுபோதையில் வாகனம் செலுத்தும் நபர்களைக் கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பரிசு வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மதுபோதையில் வாகனம் செலுத்தும் ஒருவரைக் கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கண்டறிவதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இரத்த பரிசோதனை கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# புலிகளும் ஜே.வி.பி.யும் ஒரு கொள்கையாளரே

### கூறுகிறார் நாமல்

கொழும்பு, ஏப். 13

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தேசியமக்கள் சக்திக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. நாம் பேருந்துகளுக்குத் தீவைக்கவோ அல்லது அப்பாவி மக்கள், பௌத்த மதகுருமார் மீதோ தாக்குதல் மேற்கொண்டு இந்த நாட்டை சீர்குலைக்கவில்லை- இவ்வாறு கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

மக்கள் நம்பிக்கையை வெற்றி கொண்ட ஒருவரையே பொதுஜன பெரமுனுவின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்வோம்.

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களே நாட்டுக்குத்தற்போது தேவைப்படுகின்றது. நாட்டின் இறைமை, கலாசாரம் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிச் செல்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கோழி இறைச்சி விலை உயர்வு

கொழும்பு, ஏப். 13

கோழி இறைச்சியின் சில்லறை விலை பொருளாதார மத்திய நிலையங்களில் அதிக விலையில் பதிவாகியுள்ளது.

அதன்படி ஒரு கிலோ கோழி இறைச்சியின் சில்லறை விலை ஆயிரத்து 400 ரூபாவாக உயர்ந்துள்ளது. (ச-இ)

*யாழ்.நகரில்*

# தெற்கு வியாபாரிகளால் புத்தாண்டு வியாபாரம்

கொழும்பு, ஏப். 13

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, யாழ்.நகரப் பகுதியில் நடைபாதை கடை வியாபாரங்கள் களைகட்டியுள்ளன.

தெற்கேயிருந்து நடைபாதை வியாபாரிகள் வாகனங்கள் மூலம் உடுபுடைவைகளை எடுத்து வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.நகரின் முற்றவெளியில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை புத்தாண்டு கொள்வனவுக்காக அதிகளவான மக்கள் யாழ்.நகரப் பகுதிக்கு படையெடுத்து வருகின்றனர். (ச-17)

# பலவீனமாகும் டலஸ் அணி

கொழும்பு, ஏப். 13

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் இருக்கும் மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணையவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான லலித் எல்லாவள, திலக் ராஜபக்ச ஆகிய இருவருமே இவ்வாறு இணையவுள்ளனர் என அறியமுடிகின்றது.

டலஸ் அணியில் உள்ள 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏற்கனவே அறுவர் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து புரிந்துணர்வு உடன்பாட்டிலும் கைச்சாத்திட்டுள்ளனர். இந்நிலையிலேயே மேலும் இருவர் அப்பக்கம் செல்லவுள்ளனர்.

அதேவேளை, எந்தத் தரப்புடன் இணைவது என்பது தொடர்பில் டலஸ் அழகப்பெரும உட்பட ஏனைய சில உறுப்பினர்கள் இன்னும் முடிவெடுக்கவில்லை. (ஓ-44)

# தேர்தலுக்கு சாட்சியாளராகுமாறு இலங்கைக்கு இந்தியா அழைப்பு

இந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தியத் தேர்தலுக்கு, சாட்சியாளர்களாகக் கலந்துகொள்ளுமாறு இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேபாளம், பங்களாதேஷ், இலங்கை உள்ளிட்ட 25 ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் 13 நாடுகள் தமது அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாக ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிநாட்டு தொடர்பாளர் மருத்துவர் விஜய் சௌதாவேல் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள தேர்தலில் 97 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். ஜூன் 4 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம் : 11.01.1970** **மறைவு : 13.04.2006**

**அமரர் பஞ்சாட்சரம் கிருபாகரன்**

**உரிமையாளர் சாரங்கன் நகைமாடம்**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

நீ எம்மை விட்டு பிரிந்து
பதினெட்டு ஆண்டு ஆன போதும்
உன்னை நாங்கள் இழந்த துயரை
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்

உன்னைத் தேடி எங்கள்
கண்கள் களைத்ததடா மகனே
தினமும் உன்னை நினைக்கும்போது
நெஞ்சம் வலிக்குதய்யா...
எப்போதும் உன் நினைவுடனே உன் அம்மா...

உடன்பிறப்பே எங்கள் உயிர்ச் சகோதரனே!
எங்களுடன் பிறந்தவனே
எங்கள் அருமைச் சகோதரனே !

உன்னைத் தேடி எங்கள் கண்கள் களைத்ததடா...
தினமும் உன்னை நினைக்கும்போது
நெஞ்சம் வலிக்குதடா..

அன்பின் பிறப்பிடமாய்...
பாசத்தின் ஜோதியாய்...
நேசத்தின் ஒளியாய்...
திகழ்ந்த எமது சகோதரனே...!

உடல் உயிரை பிரிந்தாலும்
உணர்வுடன் ஒன்றாகிப்போன
எங்கள் உடன்பிறப்பே
உங்கள் ஆத்மா சாந்தியடைய

பிரார்த்திக்கின்றோம்.
என்றும் உன் நினைவுகளுடன் நாம்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**
**157/1, சாரங்கா நகை மாடம்**

(CS 210) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமை; நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 13

**நாட்டின் இரண்டு மில்லியன் மக்கள் தொகையில் 5 இலட்சம் பேர் பல்வேறு போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர் என்று தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.**

சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் கஞ்சா பாவனைக்கும் ஒரு இலட்சம் பேர் வரையானோர் ஹெரோய்ன் பாவனைக்கும் அடிமையாகியுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

அத்துடன் பெரும்பான்மையான பாடசாலை மாணவர்களிடையே புகையிலை பாவிக்கும் போக்கு காணப்படுகின்றது. மொத்த சனத்தொகையில் 15 இலட்சம் பேர் புகையற்ற புகையிலைப் பாவனையிலும், 25 ஆயிரம் பேர் முதல் 30 பேர் வரை பல்வேறு போதைப் பொருள்பாவனையிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## கூட்டுறவுச் சங்கங்களில் பனம்வெல்லம் உற்பத்தி

யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பனம்வெல்லம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. உற்பத்தி செய்யப்பட்ட பனம்வெல்லத்துக்கு கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, அச்சுவேலி, கரவெட்டி, ஊர்காவற்றுறை, கோண்டாவில், சாவகச்சேரி ஆகிய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த பனம்வெல்லம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. உற்பத்தி செய்யப்படும் பனம்வெல்லத்தை வெளியிடங்களுக்கும் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)



## தாகம் தீர்த்த இளைஞர்கள்

வவுனியா, ஏப்.13

வெப்பமான காலநிலை நிலவுவதால் விலங்குகள், பறவைகளின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு வவுனியா - மன்னார் வீதியின் சில பகுதிகளில் மண்சட்டி மற்றும் சிரட்டைகளைப் பயன்படுத்தி இளைஞர்களால் தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தண்ணீர்த் தொட்டிகளை அமைத்து, இந்த வெப்பகாலத்தில் பறவைகள், விலங்குகளுக்குத் தாகம் தீர்க்கும் உன்னத கடமையில் குறித்த இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-27)

தமிழ்ப் பொதுவேட்பாளர்

## இறுதி முடிவு மத்திய குழுவில்

சிவஞானம் சிறீதரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 13

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பில், தமிழரசுக் கட்சியிலுள்ளவர்களில் ஆதரவானவர்களும் உள்ளனர். எதிரானவர்களும் உள்ளனர். 20 ஆம் திகதிக்கிடையில் கூடவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின்போதே இறுதி முடிவு எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றின் இறுதிப்போட்டியில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ப-113)

## மும்பை - கொழும்பு நேரடி விமானசேவை

கொழும்பு, ஏப். 13

இந்தியாவின் மும்பையில் இருந்து கொழும்புக்கான நேரடி விமான சேவைகளை 'இண்டிகோ' விமான சேவைகள் நிறுவனம் நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளது.

மும்பையில் இருந்து கொழும்புக்கும், கொழும்பில் இருந்து மும்பைக்கும் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் குறித்த விமான சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கலட்டி வீதியின் முகப்பில் உடைந்த பாலம்; புனரமைக்கக் கோரிக்கை

கோண்டாவில், ஏப்.13

கலட்டி வீதியின் முகப்பில் அமைக்கப்பட்ட, பழமையான வீதிப்பாலம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திடீரென விழுந்துள்ளமையால் வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கோண்டாவில் - இருபாலை வீதியின் முக்கியமான கிளை வீதியாக இது காணப்படுகிறது. அத்துடன் கோண்டாவில்முத்துட்டுமடவீதியையும் இணைக்கிறது. இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, இந்த வீதியில் அமைந்துள்ள ஆலை நிறுவனமொன்றுக்குப் பெரிய ஹன்ரர் ரக வாகனத்தில் கனதியான பொருள்கள் எடுத்துவரப்பட்டபோதே திடீரெனப் பாலம் இடிந்து விழுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். பாலம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதால், இவ்வீதி ஊடாக மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி தவிர்ந்த ஏனைய வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாலத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-66)

## தினம் தெரியுமோ?

இன்டைக்கு இரவு 8.15 க்கு குரோதி வருசம் பிறக்கப்போகுது. ஆனால் இந்த வருசம் ஒரே குழப்பமாத்தான் இருக்கப்போகுது. ஏனென்டால் வருசமே ஒரு குழப்பத்திலதான் பிறந்திருக்குது. வருசப்பிறப்பைக் கொண்டாடுறது இன்டைக்கா, நாளைக்கா எண்டதில எங்கடையாக்களிட்ட இப்பவும் குழப்பம்தான். உண்மையாவே இன்டைக்கு முன்னிரவே வருசம் பிறக்குது. ஆனால் சித்திரை மாதத்தின்ர முதலாம் நாள் நாளைக்குத்தான். இது சித்திரைப் புத்தாண்டு எண்டதால கனபேர் சித்திரை மாத முதல்நாளைத்தான் வருசமெண்டு கொண்டாடுகினம். இப்ப என்ன பிரச்சினையெண்டால், சித்திரைமாத முதல் நாளை வருசப்பிறப்பெண்டு கொண்டாடுறதா இல்லாட்டி குரோதி வருசம் பிறக்கிற நேரத்தை வைச்சு புத்தாண்டைக் கொண்டாடுறதா? எண்டதுதான்.

சனங்கள்தான் குழம்புகினம் எண்டு பார்த்தால், கலண்டர்களிலையும் ஏப்ரல் 13 ஆம் திகதியும் குரோதி வருசப் பிறப்பு எண்டு போட்டிருக்கினம், ஏப்ரல் 14 ஆம் திகதியும் அதே குரோதி வருசப் பிறப்பெண்டு போடுப்பட்டிருக்குது. அப்ப வருசம் ரண்டு நாளாப் பிறக்குதோ?

இது வருசப்பிறப்பில மட்டும் வாற பிரச்சினை இல்லை, சிவராத்திரி, தீபாவளி, நவராத்திரி எண்டு சைவசமயம் சார்ந்த எல்லா விசேச தினங்களிலையும் உந்தப் பிரச்சினை இப்ப அடிக்கடி வருகுது. அதுக்கு வாக்கிய பஞ்சாங்கத்தில ஒருமாதிரியும், திருக்கணித பஞ்சாங்கத்தில இன்னொருமாதிரியும் கணிச்சிருக்கிறதுதான் காரணமெண்டு சொல்லுகினம். சனத்துக்கு விரதங்கள், முக்கியமான தினங்கள் பற்றி வழிகாட்டத்தான் உந்தப் பஞ்சாங்கங்களைக் கணிக்கிறவை. ஆனால் இப்ப குழப்பத்தை வரவைக்கிறதுக்காகவே பஞ்சாங்கங்களைக் கணிக்கினமோ எண்டும் டவுட்டாக் கிடக்குது. பஞ்சாங்கங்களில ஏதும் குழப்பம் வந்தால் அதைத் தீர்த்து ஒரு பொதுமுடிவை அறிவிக்கிறதுக்கும் எங்களிட்ட இப்ப ஆக்கள் இல்லைப்போல.

இந்தமுறை முஸ்லிம்களின்ர நோன்புப் பெருநாளிலையும் ஒரு குழப்பம் . முதலில 11 ஆம் திகதி தான் ரமழான் பெருநாள் எண்டு இருந்தது. ஆனால் அதுக்கு முதலே பிறை தென்பட்டதால 10 ஆம் திகதிதான் நோன்புப்பெருநாள் எண்டு கொழும்புப் பெரிய பள்ளிவாசலில கூடின பிறைக்குழு அறிவிச்சது. அதைவைச்சு இலங்கையில இருக்கிற எல்லா முஸ்லிம்களும் முதலே திட்டமிட்டத்துக்கு முதல்நாளே - ஏப்ரல் 10 ஆம் திகதியே - ரமழானைக் கொண்டாடினவை. ஏதும் தினங்கள் பற்றி குழப்பங்கள் வந்தால் அதைத் தீர்த்து பொதுவான ஒரு முடிவை எடுக்க கொழும்புப் பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு மாதிரி எங்களிட்ட ஒரு வலுவான அமைப்பு இல்லை. அப்பிடியும் ஏதும் குழு பொதுமுடிவை எடுத்தால் அதில் ஆயிரம் நொட்டையள் பிடிச்சு அதை இன்னும் சிக்கலாக்கிறதுதான் எங்களுக்குத் தெரிஞ்ச ஒரேயொரு வேலை. இனியாவது உந்தப் பஞ்சாங்கக்காரரும் கதைச்சுப் பேசி சரியான தினங்களைப் பற்றி பொருத்தமான முடிவை எடுக்கோணும், அதைமாதிரி எல்லாச் சனமும் ஏற்று நடக்கக்கூடினமாதிரி பொதுமுடிவை எடுக்கிற வல்லமை கொண்ட அமைப்பையும் உருவாக்கவேணும். இல்லாட்டி ஒவ்வொரு வருசமும் இதே கூத்துத்தான் இருக்கும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு விவாதத்துக்கும் நாங்கள் தயாராக உள்ளோம்

## அநுரவைச் சீண்டும் சஜித்

**கொழும்பு, ஏப். 13**

**கோழைகள் போன்று விவாதங்களில் இருந்து தப்பி ஓடாதீர்கள். எந்த விவாதத்துக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- சர்வதேச சமூகத்தின் தலைவர்கள் சந்திக்கும்போது தனிப்பட்ட சந்திப்புகள்கூட நடக்கின்றன. மொழித்திறன் இல்லை என்றால் இங்கு ஒன்றும் செய்யமுடியாது. இவ்வாறான திறமை இல்லாதவர்களுக்கு நாட்டின் தலைமைத்துவத்தை வழங்குவது மீண்டும் பாதாளத்தில் விழுவதைப் போன்றதாகும். நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்தக்கூடிய சரியான திறனும், தூரநோக்கும் கொண்டவர் யார்?, அதனை ஒரு வேலைத் திட்டமாக மாற்றி இந்நாட்டில் நடைமுறைப்படுத்தத் தகுதியானவர் யார் என்பது குறித்து விவாதம் நடத்த எந்நேரத்திலும் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறான விவாதங்களில் இருந்து தப்பியோட வேண்டாம். பொருளாதார நெருக்கடி தொடர்பில் தனது பொருளாதாரக் கொள்கை வகுப்பாக்கக் குழுவினரோடு மாற்று அணியின் பொருளாதாரக் குழுக்களையும் ஒன்றிணைத்து விவாதம் நடத்துவோம் என நாகரிகமாக அழைக்கும்போது, கோழைகள் போன்று விவாதங்களில் இருந்து தப்பி ஓட வேண்டாம் என புரட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கிறேன் - என்றார். (ஒ-இ)

## புத்தாண்டு வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப்.13

பிரசித்திபெற்ற மானிப்பாய் ஸ்ரீ மருதடி விநாயகர் ஆலயத்தில் குரோதி வருடப் பிறப்பை முன்னிட்டு சங்கிராந்தி பூசை வழிபாடுகள் இன்று சனிக்கிழமை இரவு 8.15 மணிக்கு நடைபெறுமென ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (66)

✦ ✦ ✦

சுன்னாகம், ஏப். 13

மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில், குரோதி வருடப் பிறப்பு உற்சவம், இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சிறப்பு அபிஷேகத்துடன் இடம்பெறவுள்ளது.

குரோதி வருடப் பிறப்பு சர்வமங்கல பூசை இன்று இரவு 8.15 மணிக்கும், இரவு 9.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று, தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறுமென ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ நா.சிவசங்கரக் குருக்கள் தெரிவித்தார். (ப-66)

✦ ✦ ✦

தெல்லிப்பழை, ஏப். 13

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில், குரோதி புதுவருடப் பிறப்பு சிறப்பு பூசை வழிபாடுகள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இன்று இரவு 8 மணிக்கு சிறப்பு அபிஷேகம் ஆரம்பமாகி, தொடர்ந்து 9.04 மணிக்கு துர்க்கை அம்பாளுக்கு சிறப்புப் பூசை ஆராதனைகளும் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 6 மணிக்கு ஆலய துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் சங்கிராந்தித் தீர்த்த வழிபாடும், அம்பாள் வீதி உலாவும் இடம்பெறுமென ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (ப-66)

# அரசில் சு.க. இணைவு; இடமளிக்கமுடியாது

கொழும்பு, ஏப். 13

அரசாங்கத்துடன் சுதந்திரக் கட்சியை இணைப்பதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். அந்த முயற்சி வெற்றியளிக்க இடமளிக்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்காலத்தடை மாத்திரமே விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளவர்கள் அதனை நிரந்தர தடையுத்தரவு என எண்ணிக் கொண்டு செயற்படுகின்றனர். அமைச்சுப்பதவி மோகத்திலும், தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு முயற்சிக்கின்றனர். அதன் காரணமாகவே யாப்புக்கு முரணாக அரசியல் குழுக் கூட்டத்தையும் கூட்டி பதில் தலைவரையும் தெரிவு செய்துள்ளனர். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

## மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.13

குப்பிழான், வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப.11மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-66)

## புத்தக அரங்க விழா

தெல்லிப்பழை, ஏப். 13

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் 18 ஆவது நிகழ்வு , தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இலாபம் கூடுதலாக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அனுகூலம் உண்டாகும். ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும்.

**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். விநாயகரை வழிபட அனுகூலப்பலன்கள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து ஈடுபடவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக்கசப்புகள் நீங்கும். சுபச்செலவு ஏற்படும்.

**துலாம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே உங்கள் மீதான மரியாதை அதிகரிக்கும். நற்பலன்கள் அதிகரிக்கும். பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம்** : மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் இழுபறியாகும். அந்நியோன்னியம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவு எதுவும் எடுக்கவேண்டாம். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்கள் நீங்கும்.

# வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 13

அச்சுவேலி வடக்கு, அருள்மிகு ஸ்ரீ சித்திவேலாயுதர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்குக் கொடியிறக்கத்துடன் நிறைவுபெறும்.

திருவிழாவின் வேட்டைத்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமையும், சப்பரத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும், தேர்த்திருவிழா 22 ஆம் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தத்திருவிழா 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் பூங்காவனத்திருவிழா 24 ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறுமென ஆலய பூசகர் இ.நித்தியகஜேந்திரன் அறிவித்துள்ளார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உள்ளத்தில் இருப்பதை உரக்கச் சொல்ல ஒரு சந்தர்ப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்படும் விடயம் சூடுபிடித்திருக்கின்றது. இந்த விடயத்தைப்பற்றிப் பேச்சு எழுந்தவுடனேயே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். அவர்களுக்கு ஒத்தூதும் வகையில் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும் கருத்து வெளியிட்டிருக்கிறார். கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது வகிபாகம் மிகப்பெரியது. அந்தக் கட்சி எடுக்கும் முடிவையே தமிழ் மக்களும் எடுத்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் பங்காளிகளுடன் பேசி, அந்த முடிவு எடுக்கப்பட்டதா என்ற கேள்வி எழுந்தால் எந்தத் தாமதமும் இல்லாமல் இல்லை என்ற பதிலே கிடைக்கும். சகல முடிவுகளையும் சம்பந்தன் அல்லது சம்பந்தனின் பெயரால் சுமந்திரனே எடுத்தனர், அதை ஏனையோரிடம் திணித்தனர். அவர்களும் எதிர்ப்புகளை கட்சிக்குள் பதிவு செய்துவிட்டு, திணிக்கப்பட்ட முடிவை செயற்படுத்தினர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான தேர்தலில் எம்.ஏ.சுமந்திரன் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, கட்சிக்குள் அவருக்கான இடம் - செல்வாக்கு கட்சி தொடர்பில் தீர்மானிக்கும் சக்திக்கான அந்தஸ்து என்பன கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. கடந்த காலங்களைப்போன்று தென்னிலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்களை கண் மூடித்தனமாக ஆதரித்த சுமந்திரன்- சம்பந்தன் கூட்டின் போக்கை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் உள்ளவர்களே ஏற்க மறுக்கின்ற சூழல் உருவாகியிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தல்களில் எடுத்த முடிவு தவறு என்பதை காலம் நிரூபித்திருக்கின்றது. இதை அந்தக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன்கூட அண்மையில் ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். இப்படியான சூழலில் தங்களது கைகளை மீறி, தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் சென்று விடுமோ என்ற அச்சத்தில், இரா. சம்பந்தன் - எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அவரது அணியினர் கருத்துகளை முன்வைக்க ஆரம்பித்திருக்கின்றனர். அவர்கள் இதற்காக, ராஜபக்சக்கள் மீண்டும் வந்துவிடுவார்கள், தென்னிலங்கையில் இனவாதிகள் ஒன்றாகிவிடுவார்கள் என்ற தேய்ந்துபோன இசைத் தட்டையே மீண்டும் வாசிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். ஒவ்வொரு தேர்தல்களின்போதும், தமிழ் மக்கள் இதைச் செய்தால் தென்னிலங்கை இப்படி எதிர்வினையாற்றும் என்று சொல்லிச் சொல்லியே, தமிழ் மக்களுக்கு எது தேவை என்பதைச் சொல்லாமல் செய்து விட்டிருந்தனர். இம்முறை அதேதவறை தமிழ் மக்கள் மீண்டும் இழைப்பதற்குத் தயாரில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முடிவை நோக்கி தமிழ் மக்கள் தாங்களாக வரவில்லை. அதை நோக்கி கடந்தகால ஜனாதிபதித் தேர்தல் அனுபவங்கள் தமிழ் மக்களை தள்ளிவிட்டிருக்கின்றன. இப்போதும், தமிழ்ப் பொதுவேட்பாளர் என்றதும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கின்ற சிங்கள வேட்பாளர்கள் பதறத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் எவரும் தமிழ்ப்பொது வேட்பாளர் விடயத்தை சாதகமாகப் பார்க்கவில்லை. அந்தத் தென்னிலங்கை வேட்பாளர்களைப்போல அல்லது அதற்கு ஒருபடி மேலேபோய், சம்பந்தன் - சுமந்திரன் இணை அணியும் பதறத் தொடங்கியிருக்கின்றது.ராஜபக்ச பூச்சாண்டி அல்லது தென்னிலங்கை இனவாதிகள் என்ற பயத்தைக் காண்பித்து, தாங்கள் சேவகம் செய்யவேண்டிய ஏதோவொரு தென்னிலங்கை வேட்பாளரை நோக்கி தமிழ் மக்களைத் தள்ளவேண்டும் என்று இந்த அணியினர் சிந்திக்கின்றனர். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இதுவரைகாலமும் தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரித்து எதுவும் பெறமுடியாத சூழலில், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து, எங்கள் நிலைப்பாடு இதுதான் என்பதைச் சொல்வதற்கான சந்தர்ப்பமாக மாத்திரம் ஜனாதிபதித் தேர்தலை பிரயோகிப்பதில் தவறில்லையே...!



# சு.க. தலைமை பிடுங்குப்பாடு; புத்தாண்டின் பின்னர் வெடிக்கும்

கொழும்பு, ஏப். 13

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையதிகாரத்தைக் கைப்பற்றும் நடவடிக்கை புத்தாண்டு விடுமுறையின் பின்னர் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என்று கட்சிக்குள் பிளவுபட்டுள்ள இரண்டு குழுக்களின் உள்ளகத் தகவல்களும் தெரிவிக்கின்றன.**

புத்தாண்டு விடுமுறையின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை திறந்து. அதிகாரத்தைக் கைப்பற்றி கட்சியின் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆதரவுடன் செயற்படும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அணியினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பு உடனடியாக மாற்றப்பட்டு, 'நாயக்க' என்ற புதிய பதவி நிறுவப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை – சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆதரவுக் குழுவுக்கு கட்சியின் அதிகாரம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவான குழு தெரிவித்துள்ளது. நிமால் சிறிபால டி சில்வாவை பதில் தலைவர் பதவியில் இருந்து நீக்கவுள்ளதாகவும், அதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இரண்டு குழுக்களாகப் பிளவுபட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நெருக்கடி புத்தாண்டு பண்டிகைக் காலத்தின் பின்னர் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ச-இ)



## புத்தாண்டு காலத்தில் தேங்கிய 'கேக்'

கொழும்பு, ஏப். 13

பண்டிகைக் காலத்தில் கேக் விலை உயர்வால் கேக் தேவை குறைந்துள்ளது என்று பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ பட்டர் கேக் ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 ரூபா வரை பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது. மாஜரீன் போன்றவற்றின் விலை உயர்வால் கேக் விலையை மேலும் உயர்த்த வேண்டியுள்ளது. அதேவேளை மூலப்பொருள்களின்விலைஉயர்வால் இனிப்பு வகைகளின் விலையும் உயர்ந்துள்ளது என்றும் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

விசேட இ.போ.ச. சேவை

## நாளாந்த வருமானம் 25 மில்லியன் ரூபா

சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் விசேட பேருந்துச் சேவையின் மூலம் நாளாந்த வருமானம் 25 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது. பண்டிகைக்காலங்களில் கிராமங்களுக்குச் செல்லும் மக்களுக்காக சுமார் 200 கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## விலை ஏறினால் முட்டை இறங்கும்

கொழும்பு, ஏப். 13

உள்ளூர் முட்டை விலையை மீண்டும் அதிகரித்தால் அரசாங்கம் மீண்டும் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கடந்த சில நாள்களாக உள்ளூர்ச் சந்தையில் முட்டை யின் விலை குறைவடைந்துள்ளது. (ச-இ)

## மே மாதத்துக்குள் உ/தரப் பெறுபேறு

கொழும்பு, ஏப். 13

உயர்தரப்பரீட்சைபெறுபேறுகள் அடுத்த மாதத்துக்குள் வெளியிடப்படும். பெறுபேறுகள் தொடர்பான ஆவணங்களை மீள்பரிசீலனை செய்யும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## நாளை

14.04.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**சித்திரை 01**

சுபநேரம்: 09.05–10.35


ராகுகாலம் : 04.35 - 06.05

## நாளொரு நல்வார்த்தை

**"உலகம் நல்ல மனிதர்களால் நிரம்பியிருக்கிறது. உன்னால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் நீ நல்லவர்களுள் ஒருவராகி விடு."**

–அன்னை தெரேசா–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களின் எதிர்பார்ப்புகள் புத்தாண்டில் நிறைவேறட்டும்!



## ஈ.சரவணபவன் புத்தாண்டு வாழ்த்து

யாழ்ப்பாணம், ஏப்.13

உதயமாகும் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஆண்டாக இருக்கட்டும். இந்த ஆண்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து இடர்களும் நீங்கவேண்டும் என்று பிரார்த்திப்போம்– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், உதயன் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புகள் நிறைவேறும் ஆண்டாக இருக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இந்தப் புத்தாண்டில் தமிழ் மக்களுக்கான தீர்வுகிட்டும் என்று எதிர்பார்ப்போம். ஜனாதிபதித் தேர்தலுடன் தமிழ் மக்கள் விரும்பும் மாற்றமும் நடைபெறவேண்டும். அதை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம் – உழைப்போம். அதற்கான வாய்ப்புகளை பிறக்கும் புத்தாண்டு வழங்கும் என்று நம்புகின்றேன். பொருளாதார நெருக்கடிகள் எம்மக்களைத் தொடர்ந்தும் வாட்டினாலும், பீனிக்ஸ் பறவையைப்போல அதிலிருந்து மீண்டு வந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தப் புத்தாண்டு எமது மக்களைப் பொருளாதார ரீதியிலும் செழிப்பாக்க வேண்டுகின்றேன்– என்றுள்ளது. (ஓ)

# நிரந்தரத் தீர்வைத்தரும் ஆண்டாக அமையட்டும்





இப்புத்தாண்டு தமிழ்மக்கள் மீது திணிக்கப்படும் மொழி, மதவிரோதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைய எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம். கடந்த காலத்தில் மேற்கொண்ட பௌத்த மேலாதிக்கச் செயற்பாடுகள் இந்துக்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து இன,மத மக்களின் உணர்வுகளை மதிக்கும் இந்துக்களை புண்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்படவேண்டும்.

நடந்து முடிந்த போரால் கணவரை இழந்த பெண்களும் மனைவியை இழந்த கணவனும் பெற்றோரை இழந்த பிள்ளைகளும் உற்றாரை இழந்த உறவினருமாக தமிழ் நிலமே துன்பத்தில் இருக்கிறது. வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு உரிய தீர்வு கிடைக்கப்பெறவில்லை. இத்தகைய சூழலில் மலரும் புத்தாண்டு அனுபவித்த துன்பங்களுக்கு நிரந்தரத் தீர்வைத் தரும் ஆண்டாக அமைய எல்லாம் வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஈசான சிவ சக்திகிரீவன்**
தலைவர்,
இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர் அனைவருக்கும் புதுவருட நல் வாழ்த்துக்கள்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்



தங்கத்திருநாளாம் அட்ஷயதிருதியை (10.05.2024) முன்னிட்டு தங்கநகைகளை முற்பதிவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன்நகையால் மேலும் உங்கள் புன்னகை ஒளிரும் விரையுங்கள் நியூ லலிதாஸ்




30,32, கஸ்தூரியார் வீதி,

தொடர்பு: 021 222 5511
Hotline - 077 224 5511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி, புரிந்துணர்வு நல்வாழ்வு அமையட்டும்



தமிழ் வருடங்களில் 38 ஆவது வருடமான சுப மங்கலகர 'குரோதி' எனும் நாமத்துடன் பிறந்திருக்கும் தமிழ் புத்தாண்டானது சிறப்பான ஒருவருடமாக அனைவருக்கும் அமையவேண்டும்.

உலக மக்கள் அனைவரும் கடந்த தசாப்தகாலமாக பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளோம். அதில் குறிப்பாக எமது நாட்டுமக்கள் இன்னோரன்ன துயரங்களைத் தாங்கி, சகித்து வாழ்ந்து வருகின்றனர்.

அனைத்து சமயங்களும் வாழ்வியலை வழிகாட்டி சுட்டி நிற்கின்ற அதேவேளையில், எமது சமயமானது அன்பு, கருணை, கொல்லாமை, பிறருக்குத் தீங்கு செய்யாமை, புரிந்துணர்வு போன்ற நற்செயல்களைச் சுட்டி நிற்கிறது. இவை போன்ற விடயங்கள் தொலைத்துவிட்டோம் என்கின்ற காலப்பகுதியிலே நாம் அனைவரும் இருக்கிறோம் .

தமிழ் மக்களாகிய நாம் எமது தேசத்தில் தொடர்ந்தும் வழிபாட்டு சுதந்திரம் உள்ளிட்ட பல சிக்கல்களைச் சந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். புது வருடத்தில் எம் அனைவருக்கும் இறை பிரார்த்தனையுடன் கூடிய இன்பகரமான வாழ்வு அமையவேண்டும் என பரம்பொருளை வேண்டி இறைபிரார்த்தனையில் ஈடுபடுவோம்.

**சிவஸ்ரீ. கு.வை.க.வைத்தீஸ்வரக்குருக்கள்**
தலைவர், இந்து குருமார் அமைப்பு.
**சிவஸ்ரீ. ச. சாந்தரூபகுருக்கள்.**
செயலாளர், இந்து குருமார் அமைப்பு.

## திருப்பத்தை தந்துவிடு சித்திரைப் பெண்ணே...



ஏதும் இன்றி இருப்பிடம் நீத்து
எவரோ வீட்டில் புகலிடம் தேடி
யாதும் ஊராய் யாவரும் கேளீராய்
நலிந்தும் மெலிந்தும் வாழும் மக்களின்
புழுங்கியே வாழும் இந்நிலை போதும்
குரோதி வருடமே தரணியில் பிறந்துவா
தக்க திருப்பத்தை தந்திடு விரைவினில்...

**த.நாராயணன்**, வட்டூர்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

யாழ் நகரில் புதுப் பொலிவுடன்

# லலிதா ஜுவல்லரி
# Lalithaa Jewellery



அள்ளிக்கொடுக்கும்
அட்ஷயதிருதியை
தினத்திற்கு (10.05.2024)
முன்பு தங்க நகைகளை
முற்பதிவு செய்வோருக்கு
விசேட விலைக் கழிவுகள்
கொடுக்கப்படும்.

அன்றைய தினம் நகைகளை
கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அன்பளிப்புப்
பொருட்கள் வழங்கப்படும்

ஓடர் நகைகளை கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அன்பளிப்புப்
பொருட்கள் வழங்கப்படும்.

f lalithaa Jewellery

கிளை

இல. L.75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2863 / 077 618 3302

145, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 2462 / 077 732 2219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பொருளாதார சவால்களை எதிர்கொள்வோம்



புது வருடத்தில் சாந்தியும், சமாதானமும் மேலோங்கி வறுமைகள் நீங்கி எல்லா வளங்களுடனும் அனைவரும் வாழ வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேதினத்தில் சிங்கள மக்களும் தங்களின் புது வருடப் பிறப்பைக் கொண்டாடுகின்றனர். பல்லின சமூகம் வாழும் இலங்கைத் திருநாட்டில் இன, மத நல்லிணக்கத்தை மேலும் பறைசாற்றும் வகையில் ஒரு தேசிய பண்டிகையாக சித்திரை புதுவருடப்பிறப்பு கொண்டாடப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகப் பொருளாதாரச் சவால்களை வெற்றிக்கொள்ளும் வருடமாக மலரும் புதுவருடம் அமையவேண்டும்.

வருடப்பிறப்பின்போது பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயபூர்வ நடவடிக்கைகள் எம்மவர்களின் மரபுகளை தொடர்ச்சியாகப் பேணுகின்ற ஒன்றாகவே திகழ்கின்றது. அந்தவகையில், மருத்துநீர் வைத்துக் குளித்தல், புத்தாடை அணிதல், நறுமணங்களைப் பூசிக்கொள்ளுதல், மதவழிபாடுகளில் ஈடுபடுதல், பெரியோர்களிடம் ஆசிபெறுதல், கை விசேடம் வழங்கல் ஆகிய செயற்பாடுகளினூடாக மரபுகள் பேணப்படுகின்றன. அத்துடன் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள், கலை நிகழ்வுகளூடாக நல்லிணக்கச் செயற்பாடுகளும், சமரசமாக வாழும் தன்மையும் ஏற்படுகிறது.

'இனி என்னை புதிய உயிராக்கி, எனக்கேதும் கவலையரச்செய்து, மதி தன்னை மிகத் தெளிவு செய்து என்றும் சந்தோசம் கொண்டிருக்கச் செய்வாய்'

என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு அமைய, புது வருடத்தில் புதிய சிந்தனைகளை எம்மில் தோற்றுவித்து, மகிழ்ச்சி பொங்கும் வளமான வாழ்வை பெற இறையாசி வேண்டி அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துகளைக் கூறிக் கொள்கின்றேன்.

**திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,**
கௌரவ ஆளுநர், வடக்கு மாகாணம்

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தவணை முறைக்கட்டணம் மற்றும் விரைவாக சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்

Reg.No: DS882
உரிமையாளரின் தொடர்புக்கு
0777 226 247 / 077 614 0361
email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7678
077 949 5706 / 077 320 8883

| யாழ் மத்தி (Town) | கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்) | நெல்லியடி |
|---|---|---|
| T.P: 021 222 8004<br>077 998 6247<br>074 254 2264 | T.P: 021 221 7578<br>077 434 3149<br>077 990 5414 | T.P: 021 226 0999<br>077 261 2446 |

| மல்லாகம் | புன்னாலைக்கட்டுவன் | பண்டத்தரிப்பு | வேலணை : |
|---|---|---|---|
| T.P:021 224 3393<br>077 343 6622 | T.P:021 224 5001<br>076 384 0684 | T.P:021 225 2333<br>077 434 3798 | T.P:021 221 5472<br>077 368 9319 |

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

தங்கத்திருநாளாம் அட்ஷயதிருதியை (10.05.2024) முன்னிட்டு
தங்கநகைகளை முற்பதிவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

மைதிலி நகைமாடம்
தனியார் நிறுவனம்



Maithily Nakai Maadam (Pvt) Ltd






HAPPY New Year

என்றும் மங்கிடா
தரம் குன்றிடா
தங்க நகைகளின்
சாம்ராஜ்யம்

யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்

89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7302 79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரையில் விதிசெய்வோம்



நேரேதான் இரவுபகல் கோடாவண்ணம்
நித்தம்வர யாவும் நிலைக்க வைத்தவர்
சித்திரையில் குரோதி புத்தாண்டை
சுழலவைத்தார் காலமெனும் சக்கரத்தில்

மருத்துநீர் வைத்துப் புறம்சுத்தம் பேணி
மனைகள் தோறும் மங்கலம் பொங்க
மண்பானைப் பொங்கல் பொங்குவதுடன்
மனப்பானையிலும் மனிதம் பொங்கிடுவோம்

தேடல் உள்ள உயிர்களாய்த்
தேடும் பொருள்கள் யாவிலும்
தெளிந்த உண்மை பெற்றிடத்
தாகம் கொள்ள விதிசெய்வோம்

தாகம் உள்ள உயிர்களுக்கே
தார்மீகப் பசியும் மிகுந்திருக்கும்
தார்மீகப் பசியைத் தினந் தினந்
தேடித் தேட விதிசெய்வோம்

வள்ளுவர் சொன்ன விதிப்படி
வையத்துள் வாழ விதிசெய்யின்
எங்கும் இன்பம் எதிலும் இன்பம்
தங்கு தடையின்றிப் பொங்கிவரும்

தங்கு தடையின்றிப் பொங்கிவரும்
புதுப்புனல்போல் நர்த்தனமாடிக்
கோடி நன்மைகள் கொடுத்திடக் குவலயமதனில்
சித்திரைப்புத்தாண்டாய்ச்
குரோதி அரங்கமேறுகிறாள்

**சிவசுப்பிரமணியம் சந்திரமௌலீசன்.**

# புத்தாண்டே வருக! புதுவாழ்வு தருக!



இன்று தமிழ்ப் புத்தாண்டு பிறக்கின்றது. இதுவரை நாளும் பட்ட துன்ப துயரங்கள் யாவும் நீங்கப் பெற்று இனியாவது மகிழ்ச்சி நிறைந்த மங்கல நல்வாழ்வு மலர வேண்டுமென்று இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

இன்று பிறந்துள்ள புதுவருடத்தக்கு 'குரோதி' என்று பெயர். அதாவது இன்று முதல் மக்கள் எல்லோரும் குரோதம் இல்லாமல் விரோதம் பாராட்டாமல் மங்கலம் நிறைந்த சுபீட்சமான நல் வாழ்வு அமைய வேண்டும்.

எல்லோரும் புத்தாடைகளை அணிந்து சந்தோசங்கொண்டாடி மகிழ்ச்சியிற் திளைக்க எல்லாம் வல்ல யாழ். வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாளுடைய பொற் கமலபாதம் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**கலாபூஷணம்,**
**இராசையா ஸ்ரீதரன்**

## எக்காலமும் இனிக்க வா

சராசரி மனிதனும் சந்தோஷிக்க வல்லதென
குரோதியே எழுந்தருளுவாய்விரோத
சக்திகள் எம்மிடையே ஊடுருவா வண்ணம்
எக்காலமும் இனிக்க வா.

**கே.எஸ்.சிவஞானராஜா**



அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

தங்கத்திருநாளாம்
அட்ஷயதிருதியையை (10.05.2024) முன்னிட்டு
தங்க நகைகளை முற்பதிவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவுகள்
வழங்கப்படுகின்றன.

பூரணி
நகை மாடம்





தங்கப்பவுண் நகை வியாபாரம்

பாரம்பரிய கலைநயத்துடன்
தங்க ஆபரணங்களை ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளுங்கள்

46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3121

அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

வினோ நகைப்பூங்கா

தங்கத்திருநாளாம் அட்ஷயதிருதியை (10.05.2024) முன்னிட்டு
தங்கநகைகளை முற்பதிவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
இல. 177, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில்
இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளருக்கு
அன்புடன் அறியத்தருகின்றோம்.





உங்கள் தங்க நகைகளை
டிஜிட்டல் முறையின்
மூலம் துல்லியமாக தரம்பார்த்துத்
தரச்சான்றிதழ் வழங்கப்படும்.




உரிமையாளரும், ஊழியர்களும்
வினோ நகைப்பூங்கா
இல. 177, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஸ்மாட்டின்
# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு தள்ளுபடிகள்

உங்கள் இல்லங்களில் பொருத்தக்கூடிய அழகிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்






## உங்கள் தொழில் முயற்சிக்குரிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்



ஒரு மணித்தியாலத்திற்கு 120 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ரூபா 340,000.00

ஒரு மணித்தியாலத்திற்கு 250 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ரூபா 450,000.00





ஒரு மணித்தியாலத்திற்கு 500 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ரூபா 550,000.00

## உங்கள் குளியல் அறைகள் கல்சியப் பிரச்சனையில் இருந்து விடுபட




ஒரு நாளைக்கு 2000L நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும்

ஒரு நாளைக்கு 3000L நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்திக்கொள்ள முடியும்.

உங்கள் தேவைகளுக்கேற்ப எந்த அளவிலான நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் தயார் செய்து தரப்படும்.

## YARL SMART (Pvt) Ltd.

*"Smart Water, Smart Life"*

341, KKS Road, Jaffna | 021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடப் பிறப்பு உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 13

உரும்பிராய் ஸ்ரீ காளி அம்பாள் ஆலய குரோதி வருடப் பிறப்பு உற்சவம் இன்று சனிக்கிழமை இரவு 7.15 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். இதன்படி இன்று இரவு 8.15 மணியளவில் சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெற்றுத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலாவரும் திருக்காட்சியும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ம-66)

## குருதிக்கொடை

பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமொன்று இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. பொற்பதி அறிவாலயத்தில் இன்று காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ள இந்தக் குருதிக்கொடைமுகாமில் விரும்பியவர்கள் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)


## தேவை

சாவகச்சேரிப்பகுதியில்
**வயோதிப மாதுவை**
தங்கியிருந்து பராமரிக்கக்கூடிய
**பணிப்பெண் தேவை.**
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**071 856 5669**

(CS 201) J-1

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

**கிளிநொச்சி A9 வீதி கந்தசாமி கோவில்** அருகில் அமைந்துள்ள **சாளினி ஓட்டோ கூல்** நிறுத்தப்பட உள்ளதால் எம்மிடம் திருத்த வேலைக்குத் தரப்பட்ட **குளிர்சாதனப்பெட்டி, மின்சாரப்பொருட்களை இம்மாத இறுதிக்குள்** மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : உரிமையாளர்.**
**077 958 3343**

(CS/28255) J-1


# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில் 10.01.1945

இறைவன் மடியில் 13.04.2015

## அமரர் சீவரட்ணம் மனோரஞ்சிதமலர்

திதி: 04.04.2024 அமிர்த சித்த நசமி

புன்முறுவல் காட்டியே முகமன் செய்யும் வடிவம்
குறுநகை ததும்ப உரையாடிடும் குணக்குன்றம்
சுறுசுறுப்புடன் சுயமாக உதவிடும் சுந்தர உருவம்
அன்பு காட்டி அமுதும் ஊட்டி அரவணைத்த கரங்கள்
பதற்றம் பரவிய பரிதவிப்பிற்கு பரிகாரம் எது?
சத்திய நிழலில் நித்தியமாய் இளைப்பாறட்டும்
எதற்கும் இறையருளே துணைநிற்கும்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

182, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

(CS 00206) S-1

# கண்ணீர் அஞ்சலி



## கலாபூஷணம் அம்பலவாணர் ஜெயராமன்

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவரும் சிறந்த வயலின் இசைக் கலைகுருமாகிய ஜெயராமன் அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பாகும். அவருக்கு எமது இதய அஞ்சலிகளை உரித்தாக்குகின்றோம்.

(11.04.2024 வெளிவந்த குறிப்பிட்ட விளம்பரத்தில் தவறுதலாக உற்றார். உறவினர். நண்பர்கள் என்று பிரசுரமாயுள்ளது)

பிரிவால் துயருறும்
**தர்மகர்த்தா சபை**
**வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**(நாச்சிமார் கோவில்) யாழ்ப்பாணம்.**

(CS 00183) V-1

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வமலர் சித்திவிநாயகப்பிரகாசம்

யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வமலர் சித்திவிநாயகப்பிரகாசம் அவர்கள் (09.04.2024) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், ஊரெழுவைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகுரு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சித்திவிநாயகப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், சுபாங்கினி (கொழும்பு), வினோதினி (கனடா), தபோதினி (கனடா), பிரபாகினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிறிஸ்டி விக்டர் (வைட் ஹவுஸ்), மகேந்திரராஜ், சந்திரராஜ், பகிரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகன்யா, கயூரன், டிலக்ஷி, சஞ்சீவன், மேனன், லீசா, லக்ஷ்மன், அலோமா, துஷ்யந்தன், சாங்கவி, கிரிஷ்பன், மஹிஷா, மாதேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், விட்னி, லூக்கா, எமி, ஒலிவியா, எமா, ஜோடன், ஏட்ரியெல் ஆகியோரின் பூட்டியும், இன்பமலர், அரியமலர், முருகதாஸ், இந்திரஜோதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சிவபிரகாசம், அருள்பிரகாசம், செல்வபிரகாசம், விநாயகப்பிரகாசம், சபாரட்ணம், ஜெயனொளிபவன், சுசிலா மற்றும் செல்வவிநாயகப்பிரகாசம் (கொழும்பு), சிவபாலசுந்தரம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15.04.2024 திங்கட்கிழமை பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் காலை 8.30 மணி முதல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கனத்தை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**TP: 077 908 1896**
**077 600 8212**

(CS/00192) J-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 11 . 1934

இறப்பு 11 . 04 . 2024

## சூசைப்பிள்ளை பெஞ்சமின் அருமைநாயகம்

**பொறியியலாளர்**

**(Chairman - Arumainayagam Associates, Pedro Coolers Ltd, Pedro Export Ltd)**

வல்வெட்டித்துறை, நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியையும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூ.பெஞ்சமின் அருமைநாயகம் அவர்கள் கனடாவில் 11.04.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை (சின்னத்தம்பு)- மங்களம் தம்பதியினரின் சிரேஸ்ர புதல்வனும், யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி காலஞ்சென்ற கிறிஸ்ரியன் - யோசெபின் தம்பதியினரின் மருமகனும், மேள் திரேஸ் புஸ்பராணியின் அன்புக் கணவரும் இமானுவெல் இளங்கோ, மைக்கல் இளஞ்சேரன், கிறிஸ்ரலின் வாசுகி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மேரிராணி, சேவியர் குலநாயகம், காலஞ்சென்ற மேரி ஜெயநாதன், விக்ரர் தனிநாயகம் (அவுஸ்திரேலியா), மேரி நிர்மலா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற லெறின், திருமதி.லினெற் இரத்தினசிங்கம், காலஞ்சென்ற அமிர்தராஜா, யோகராஜா, திருமதி இமாகுலெற் நீக்கலஸ் சுகிர்தராஜா, குணராஜா, திருமதி ஜீன் ஈஸ்வரிராஜன் காலஞ்சென்ற R.E.C. ஜெயராசா மற்றும் தேவஜோதி குலநாயகம், காலஞ்சென்ற அன்ரனி ஜெயநாதன் மற்றும் Dr.சுசிலா (அவுஸ்திரேலியா), அருச்சனா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சூ.சேவியர் குலநாயகம்-சகோதரன்**
**0778617740**
**0014169964949**
**இமானுவெல் இளங்கோ - மகன்**

**36, மார்ட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 202) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரோதங்களைக் களையும் குரோதியே வருக


■ கே.எஸ்.சிவஞானராஜா

மக்கள் உளம்பூரிக்கும் படியாகக் கொண்டாடப்படும்,பேறான தினமே, சித்திரைப்புத்தாண்டு ஆகும். தமிழர்தம் வாழ்வில் புனிதமான நாள் இதுவாகும். ஆம்! இலங்கையில் பௌத்தர்களும், தமிழர்களும் சித்திரைப் புத்தாண்டினை வெகு விமர்சையாகக் கொண்டாடிவருகின்ற,உன்னத நிகழ்வாகி இருப்பது, உலகத்தவர்களின் கவனத்தினை அதிசயிக்க வைத்ததுள்ளது. இத்திரு நாளினை அனுபவிப்பதற்காகவே அதிகளவில் வருகை தருகிறார்கள். எம்மோடு கலந்து கொண்டாடுகின்றனர்.

இலங்கையர்களின் வாழ்விலே புதியதோர் வாழ்வு ஆரம்பமாகிறது. பேறுகள் புதிய வரமாகிறது. புதிய எண்ணங்களோடு புதிய மனிதர்களாகத் தம்மை அடையாளப்படுத்த திடசங்கற்பம் பூணுகிறார்கள். ஆண்களும் பெண்களும் சமத்துவமாக பேதங்கள் மறந்து வாதங்கள் தவிர்த்து நாதங்களாய் வெல்கிறார்கள்

உணவு உடை உறையுள் மூன்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அத்தியாவசியமான ஆதார தேவைகள் என்பதை உணர்ந்தவாறு புதிய ஆண்டு பிறக்கின்றது.

யாழ்ப்பாணம் கொக்குவில் இ.சி இரகுநாதையரின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயரின் ஜேஷ்ட புத்திரன் வெ. இரகுநாதையரால் கணிக்கப்பெற்ற வாக்கிய பஞ்சாக்கத்தின் பிரகாரம் 13.04.2024 சனிக்கிழமை முன்னிரவு நாடி 35 விநாடி , விநாடி 25 மணி 8.15 பூர்வ பக்க ஷஷ்டி திதியில் மிருகசீரிட நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் சோபனம் நாம யோகத்தில் ,துலா லக்கினத்தில் மிதுன நவாம்சத்தில் . சனி கால வோரையில், தாமத குணவேளையில் வல்லூறு அரசுதடதொழிலும். சூக்கும் பஷி உண்டித்தொழிலும் செய்யும்காலத்தில் இப்புதிய குரோதி வருடம் பிறந்தாலும் 14.04.2024 ஞாயிறன்று தமிழுக்கு சித்திரை முதலாந்திகதி வருடப்பிறப்பென அறிவிக்கப்படுகின்றது. 13.04.2024உம்14.04.2024 உம் குரோதி வருடப் பங்காகி விஷேடமாகிறது.



சூரியன் மேட ராசியில் பிரவேசிப்பது முதல் மீனராசியை விட்டு நீங்கம் வரையும் உள்ள காலப்பகுதியாகும் . இது சௌர வருஷம் எனப்படுகின்றது.

அயன வருஷம் எனப்படுவது,சூரியன் மேஷாயனத்தில் பிரவேசிப்பது முதல் மீனாயனத்தில் நீங்கும் வரையுள்ள காலப்பகுப்பாகும் இந்தக் குரோதி வருஷம் மேஷராசி ஆரம்பத்துக்கு முன்னே 24 பாகை 11 காலை 11 விகலை தூரத்தில் இருக்கின்றது.

குரோதி வருஷம் பிறக்கின்ற, இப்புண்ணிய காலத்தில் யாவரும் தூய பக்திசிரத்தையோடு மருந்து நீர் சிரசில் தேய்ந்து,தலையில் புன் கிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஷ்நானஞ் செய்தல் வேண்டும். மருந்து நீரில், தாழம்பூ தாமரைப்பூ,மாதுளம்பூ, துளசி விஷ்ணு கிராந்தி
சீதேவியார்,செங்கநீர்,வில்வம் ,அறுகு,பீர்க்கு,மிளகு.திற்பலி,சுக்கு ஆகிய 18 வஸ்துக்களை சுத்த ஜலத்தில் இட்டு காய்ச்சிக் கொள்ளவேண்டும்.

சிறப்பாக, தோஷ நட்சத்திரங்களான மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், சித்திரை விசாகம், அனுசம், கேட்டை, அவிட்டம் இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானஞ்செய்தேயாக வேண்டும். மேலும் தம்மாலியன்ற தானதர்மம் செய்தேயாக வேண்டும். 14.04.2024 ஞாயிற்றுக்கிழமையன்று வைகறையில் துயிலெழுந்து, காலைக்கடன்களை இனிதே நிறைவேற்றி, தூயசிந்தையராகி, நீராடி, அறம் பொருள் இன்பம் பேறடைந்து, மங்கலப்பொருள்களைத் தரிசித்து, சூரியனுக்குப்பொங்கலிட்டு, ஆலய தரிசனம் செய்யக்கடவீர்களாக.

**கைவிஷேசம்**

குடும்பத் தலைவரினாலும், வயதுக்கு மூத்தவர்களினாலும் கைவிஷேசம் ஏனைய குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்டு பணப்பாவனை ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

சிறுபிள்ளைகளுக்கு இது ஓர் வரப்பிரசாதமாகும். வெற்றிலையில், நெல்லு, மஞ்சள், பூக்கள், பழம், பாக்கு, நாணயக்குற்றிகள், தாள் காசு ஆகியன வைத்துக் கையளிக்கப்படும்.

எத்தனை நெல்லுகள் கிடைக்கின்றனவோ அதுவே வாழ்க்கையயாக அமையும். உதாரணமாக 67 நெல்லுகள் கிடைக்குமாயின் அதனுடைய தாற்பரியம், “நீ துயரப்படுகிறாய் சுகம் வரும்” என்பதாகும். 27 நெல்லுகள் இருக்கும் பட்சத்தில், “தெய்வ சகாயமுண்டு, காரிய ஜெயம்” என்பதாகும்.

வருட பிறப்பன்று சுபநேரத்தில் புதிய பஞ்சாங்கம் பார்த்து நாள் குறிக்கப்படும். காரணம், ஒரு புதிய வருடத்துக்கான திட்டமிடுதலில் நாம் வெற்றி கண்டு வருகின்ற பாங்கதனை எல்லோருக்கும் பொறுப்புடையதாக்குவதாகும்.

இலங்கையர் ஆகிய யாம், சர்வவல்லமையோடு, சமத்துவக் கோட்பாட்டுடன் வர்க்க பேதமின்றி, வறுமையை அகற்றி பொறுமையைப் பாத்திரமாக்கி ஆயிரம் பிறை கண்டு அப்பாலும் ஆரோக்கியமாய் வாழ, எவ்வித அச்சமுமில்லாமல் பிறக்கின்ற குரோதி வருடத்தினை வரவேற்று ஆராதிப்போமாக. போதையற்ற இலங்கையைப் பேறாக்க ஒவ்வொரு குடிமகனும் அயராது பாடுபடுவோமாக.

**காணி விற்பனைக்கு**

சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
1 1/4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 076 089 1961

**நாளை தேர் உலா வரும் யாழ் அத்தியடி பிள்ளையார்**



வசந்தமண்டப பூசை - காலை 08.00 மணி

தேருக்கு எம்பெருமான் எழுந்தருளல் - காலை 09.00 மணி

கோயில் நிர்வாகசபை

விளம்பர அனுசரணை:
**சிங்கப்பூர் ஜுவலறி**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 271 9372

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் தோல்விக்கு டெல்லி முற்றுப்புள்ளி



லக்னோ, ஏப். 13

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், லக்னோ அணியை வீழ்த்தி தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது டெல்லி.

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி அதிரடி வீரர் குயின்டன் டி ஹொக்கை மூன்றாவது ஓவரிலேயே இழந்தது. அணித்தலைவர் கே.எல்.ராகுல் அற்புதமாக ஆடினாலும் மறுமுனை பலவீனமானதாகவே இருந்தது. படிக்கல் 3 (6), ஸ்ரொய்னிஸ் 8 (10), பூரன் 0 (1), ஹூடா 10 (13) என்று அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். நன்றாக ஆடிக்கொண்டிருந்த ராகுலும் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 94 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்து தவித்தது லக்னோ. அணி 130 ஓட்டங்களைத் தொடுவதே சிரமம் என்றிருக்கையில், ஆயுஸ் படோனி மற்றும் அஸ்கட் கான் இருவரும் இணைந்து அதிரடியாக விளையாடி அணியை மீட்டனர். 35 பந்துகளில் 55 ஓட்டங்களைக் குவித்தார் படோனி. அஸ்கட் கான் 20 ஓட்டங்களைப் பெற லக்னோ அணி 7 விக்கெட்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கு வோர்ணர் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பிருத்வி ஷா மற்றும் ஜெக் ப்ரசர் இருவரும் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர். 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிருத்வி. எனினும், அபாரமாக விளையாடிய ஜெக் ப்ரசர் அரைச்சதம் கடந்தார். ஜெக் ப்ரசர் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், அணித்தலைவர் பன்ட் தன் அதிரடியால் டெல்லியின் வெற்றியை இலகுப் படுத்தினார். 24 பந்துகளில் 41 ஓட்டங்களை பன்ட் குவித்தார். முடிவில் 4 விக்கெட்களை இழந்து 11 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது டெல்லி.

(ம)


## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 06 . 1944



மறைவு 12 . 04 . 2024

**சுப்பிரமணியம் பாலசண்முகநாதன்**

(முன்னாள் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க உள்ளக கணக்கு ஆய்வாளரும், முன்னாள் செயலாளர் - நல்லூர் இளங்கலைஞர் மன்றம்)

அவர்கள் நேற்று (12.04.2024) வியாழக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வ.சுப்பிரமணியம் தம்பதியரின் (நவாலி) மகனும், காலஞ்சென்ற க.கந்தையா ஆசிரியர் (இருபாலை) அவர்களின் மருமகனும், திருமதி பா.சிவயோகேஸ்வரி அவர்களது அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.04.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் 343, பருத்தித்துறை வீதி, நல்லூரில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0777 283 692

(CS 209) A-1

## மரண அறிவித்தல்

மலர்வு 22 . 07 . 1946



உதிர்வு 11 . 04 . 2024

**திருமங்களநாயகி நாகராஜா (ராசாத்தி)**

(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்)

வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமங்களநாயகி நாகராஜா அவர்கள் நேற்று முன்தினம் (11.04.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா நாகராஜா (முன்னாள் உத்தியோகத்தர், P.C.C) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திருமலர்ராணி, திருமுருகராசா, திருமோகனராதா, காலஞ்சென்ற திருமேனகாதேவி மற்றும் திருமதிவதனா, திருமதனரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரன், கனகம்மா மற்றும் தர்மராஜா, உமாபதிசிவம், நடேசலிங்கம், சௌந்தர்ராஜன், திருநாவுக்கரசு, தனபாலசிங்கம், சந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும், பரணீதரன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷோபிகா, வாகீசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிஷ், பிரரிக்ஷா, ஷோஷித், ஹர்சனா, பிரிஷ்னி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வேலாயதம் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
க.நாகராஜா - [illegible] 5105
நா.பரணீதரன் - [illegible] 1524

S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 04 . 1942



மறைவு 12 . 04 . 2024

**தம்பிப்பிள்ளை அமிர்தலிங்கம்**

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று (12.04.2024) வெள்ளிக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகமுத்து தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், நிரூபராணி (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், வடமாகாணக் கல்வித் திணைக்களம்), திருச்செல்வன், தர்சனி (அதிபர், யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தமாறனின் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல், மடு கல்வி வலயம்) அன்பு மாமனாரும், சகானாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இரத்தினம், தாமோதரம்பிள்ளை, சுப்பிரமணியம், சிவகோசரியார் மற்றும் சிவபாக்கியம், முத்துக்குமாரசுவாமி (ஓய்வு நிலை அதிபர், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும், முத்துக்குமாரசுவாமி (ஓய்வு நிலை அதிபர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), செல்லத்துரை, அழகம்மா, சிவலிங்கநாதன், பொன்னம்மா, புஸ்பராணி, காலஞ்சென்ற கனகரத்தினம் செல்வரத்தினம், கணபதிப்பிள்ளை, கமலேஸ்வரி, வசுமதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.04.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலம் வீதி,
கைதடி மேற்கு,
கைதடி.

(CR 42214) S-1

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஏப். 13
கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியபரந்தன் பகுதியில், நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் இருந்து ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த பெனடிற் நிமலன் (வயது - 37) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

# ஞானசாரதேரருக்கு இன்று விடுதலை?

கொழும்பு, ஏப். 13
இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானசாரதேரர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் இன்று விடுவிக்கப்படச் சாத்தியங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
புத்தாண்டை முன்னிட்டு 917 கைதிகள் இன்றையதினம் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படுகின்றனர். அவர்களில் ஞானசாரதேரரும் ஒருவராக இருக்கலாம் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
மார்ச் மாதம் 28ஆம் திகதி ஞானசாரதேரருக்கு 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## பொது...

சூழமைகளில் தமிழ் மக்கள் தங்கள் இருப்பை நிலை நிறுத்தவும், உரிமைக் கோரிக்கைக்கான ஒரு குரலாகவும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
காலங்காலமாக நாங்கள் ஜனாதிபதித் தேர்தல்களில் யாரேனும் ஒரு பெரும்பான்மைக்கட்சியின் வேட்பாளரையே ஆதரித்து வந்துள்ளோம். ஆனால் அது எத்தகைய மோசமான முடிவென்பதை வரலாறு பட்டுணரச் செய்தபின்னும்கூட, இன்னும் அதிலிருந்து பாடம் கற்கத் தயாரற்றவர்களாகவே நாம் உள்ளோம்.
எமது இனத்தை அழித்த இறுதிப்போரை முன்னின்றி நடத்திய சரத் பொன்சேகாவையும், அந்த இறுதிப்போரின் கடைசி நாள்களில் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பு வகித்த மைத்திரிபால சிறிசேனவையும், கடந்த தேர்தலில் சஜித் பிரேமதாஸவையும் ஆதரித்து கடைசியில் என்ன கண்டோம்? அவர்கள் எங்கள் வாக்குகளைப் பெற்றுவிட்டு, சராசரிப் பேரினவாதப் போக்குடனேயே தமிழர் பிரச்சினைகளை அணுகினரே தவிர, எமது வாக்குகளும் அவர்களின் வெற்றிக்குக் காரணம் என்ற நன்றி சிறிதும் காட்டவில்லை. இப்படி பேரினவாதக் கட்சி களமிறக்கும் வேட்பாளர்களுக்கு நம்பி வாக்களித்து ஏமாறுவதை இனியும் தொடர்வது இனத்தின் இருப்புக்கு ஆரோக்கியமல்ல.
அப்படியானால் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது ஆரோக்கியமானதா? என்ற கேள்வி எழலாம். தமிழ்க் கட்சிகளால் ஒரு பொதுவேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டால், ஒட்டுமொத்த தமிழ்மக்களின் வாக்குகளும் சிந்தாமல் சிதறாமல் கிடைத்தாலும்கூட அந்த வேட்பாளரால் வெற்றிபெற முடியாதென்பது வெளிப்படையானதே. ஆனாலும் அந்தத் தோல்வியிலும் நாம் சில வெற்றிகளை அடைய முடியும். தமிழர்கள், சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையிழந்துவிட்டார்கள் என்பதையும், தமிழ் மக்களின் அபிலாஷை இலங்கையின் பெரும்பான்மைப் போக்குக்கு மாறானது எனவும், உரிமைக்கான எமது ஒன்றுபட்ட வேட்கையையும் பொதுவேட்பாளருக்கு திரளாக வாக்களிப்பதன்மூலம் நாம் உணர்த்தமுடியும். அப்படி அவர்கள் உணராவிட்டாலும் அதுகுறித்து நாம் கவலையடையத் தேவையில்லை. ஏனெனில் பேரினவாதக் கட்சிகளின் வேட்பாளருக்கு வாக்களித்தாலும் ஏதும் அதிசயம்நிகழ்ந்துவிடப்போவதில்லையே?
ஆனால் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல், பேரினக்கட்சிகளின் வேட்பாளரை ஆதரிக்கும் கருத்துநிலையை தமிழ்மக்களிடம் சிலர் விதைக்க முனைகின்றனர். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருதுகோள் முளையில் இருக்கும்போதே, அது ராஜபக்சக்களின் சதி என்று பதறுகின்றனர். தங்களின் திட்டங்கள் பாழாகிவிட்டமையும், கிடைக்கவேண்டிய வரப்பிரசாதங்கள் இல்லாமல் போய்விடுமோ என்ற ஆதங்கமுமே இந்தப் பதற்றத்துக்கு மிகமுக்கியமான காரணங்கள்.
ஆனால் உண்மையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் பேரினவாத ஆட்சியாளர்கள் வெல்வதற்கே துணைசெய்கிறார்கள் என்பதே உண்மை. மீண்டுமொருமுறை மக்களைப் படுகுழிக்குள் தள்ளிவிடவே இவர்கள் எத்தனிக்கின்றனர். எனவே இந்தத் திசைமாற்றல்களுக்கு எடுபடாமல், பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவோடு ஒன்றித்து, எமது உரிமைக்குரலை உலகறியச் செய்வதே காலப்பொருத்தம். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து மாத்திரமே. தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்து கட்சியே இறுதி முடிவெடுக்கும், அந்த முடிவு கடந்த காலங்களைப் போல மீண்டும் இருண்ட யுகத்துக்குள் எமதினத்தை மூழ்கடிக்காமல், ஒளிமயமானதாக, தீர்க்கமானதாக அமைய வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## அழையாத...

கட்டமைப்பு ஒன்றை அமைப்பதுடன் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் நேற்றையதினம் இடம்பெறவிருந்தது. இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர். இதன்போது சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையிலான குழுவினரும் கூட்டமண்டபத்துக்கு வருகை தந்திருந்தனர்.
சச்சிதானந்தம் உள்ளிட்ட குழுவினரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள், "இவர்கள் கூட்டத்தில் இருந்தால் நாங்கள் வெளியே செல்கின்றோம்" என்று கூறிவிட்டு மண்டபத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். பொதுமக்கள் வெளியில் சென்றபோதும் சச்சிதானந்தம் தலைமையிலான குழுவினர் அந்த மண்டபத்தை விட்டு வெளியில் வரவில்லை. இதையடுத்தே கூட்டத்தை ஒத்திவைப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
கூட்டத்துக்கு வருகைதந்த மக்கள் வெளியில் சென்றதையடுத்து, மண்டபத்துக்குள் இருந்த மேசையில் சச்சிதானந்தம் படுத்துறங்கியதுடன் மக்கள் அனைவரும் தத்தம் வீடுகளை நோக்கிச் சென்ற பின்னரே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.
"வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற அடாவடித் தனங்கள் தொடர்பில் சிவசேனை அமைப்பு எந்தவொரு கண்டனத்தையும் இதுவரை பதிவுசெய்யவில்லை. அத்துடன், வெடுக்குநாறிமலை ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட எந்தவொரு ஆர்ப்பாட்டங்களிலும் சிவசேனை பங்கெடுக்கவில்லை. மட்டுமல்லாமல், அண்மையில் குருந்தூர்மலைக்குச் சென்று அங்குள்ள பௌத்த பிக்குகளுடன் சிவசேனை அமைப்பினர் உறவாடியிருந்தனர். இதனால் அவர் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஆதலால் தான் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்று சச்சிதானந்தத்துக்கு எதிர்ப்பை வெளியிடுகின்றோம்" என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் தெரிவித்தனர். (அ-ம-110-26)

## வடக்கில்...

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## ஜூன் மாத...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் பிரதீபா மஹாநாமஹேவா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
இலங்கை தொடர்பில் இந்த மாதம் இரண்டாம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையொன்றை வெளியிட்டது. அந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் அமர்வில் பேசுபொருளாக இருக்கும். இவ்வாறானதொரு பின்னணியில் மன்னிப்புச்சபையின் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்குப் பெரும் பின்னடைவைக் கொடுக்கும். மன்னிப்புச் சபையின் அறிக்கை தொடர்பான தனது நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். இல்லாவிடில் அது நேரடியான தாக்கங்களை ஏற்படுத்தும் - என்றார்.

**மன்னிப்புச்சபை கூறியது என்ன?**

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நடைபெற்ற 30 ஆர்ப்பாட்டங்களில் சிறிலங்காப் பொலிஸார் சட்டவிரோதமாக ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. 17 ஆர்ப்பாட்டங்களில் தடியடி, நீர்த்தாரைப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் என்பன இடம்பெற்றுள்ளன என்றும் அத்துடன், வடக்கு - கிழக்கு பகுதிகளில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களின்போது புலனாய்வாளர்களால் தடுத்து நிறுத்த முற்படுதல், துன்புறுத்தல், கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் மன்னிப்புச்சபை எண்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## ஆழ்துளைக்...

வவுனியாவில் அண்மைய நாள்களாக ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக புலம்பெயர்ந்து வசிக்கும் வெளிநாட்டவர்களின் நிதி உதவிகளில் இவ்வாறான அதிகமான கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலத்தடிநீரின் தன்மை மோசமடையும் நிலை ஏற்படும் எனசூழலியலாளர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.
ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதால் ஏற்படும் எதிர்கால அபாயங்கள் தொடர்பாக அறிந்துகொள்ளாமல் இவ்வாறான செயற்பாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குவது பொருத்தமானதல்ல என்றும் சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதேவேளை-வவுனியாவில்ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகளை தொடர்புடைய அரச திணைக்களங்கள் கண்காணிப்பதில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-110)

## தீப்பற்றி...

கடந்த 3ஆம் திகதி அந்தப்பெண் உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது, பாத்திரங்களை அடுப்பிலிருந்து இறக்குவதற்குப் பயன்படுத்தும் துணி மண்ணெண்ணெய் அடுப்பில் (குக்கரில்) சிக்கியுள்ளது. துணியை இழுக்கும் போது அடுப்பு சரிந்து அவர் மீது வீழ்ந்து வெடித்து எரிந்துள்ளது. இதையடுத்து அன்றையதினமே அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். உடல்நிலை மோசமடைந்ததையடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தென்மராட்சிக்...

பெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காகச்சென்றவேளையில் டிப்பர் ஒன்றுடன் ஏற்பட்ட விபத்தில் அவர் படுகாயமடைந்திருந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று உயிரிழந்தார்.
யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரண விசாரணையை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
(அ-ம-159-66-26-9)

## மீண்டும்...

நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையிலேயே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதையடுத்து அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாரப்புத் தரையிறக்க நாவல் ரி.ஐ.டி.யினர் தீவிர விசாரணை

யாழ்., ஏப். 13

குடாரப்புத் தரையிறக்கம் பற்றிய நாவலுக்காக எழுத்தாளர் ஒருவரிடமும், கரைச்சி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் நேற்றைய தினம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற நா.யோகேந்திரநாதனின் 'நீந்திக்கடந்த நெருப்பாறு' நூல் வெளியீட்டு விழாவின் ஒழுங்கமைப்பு யாருடையது? அந்த நூல் விடுதலைப்புலிகளை மீளுருவாக்கும் வகையில் எழுதப்பட்டதா? நிகழ்வில் பங்கேற்றவர்கள் யார்? நீங்கள் எதற்காக தலைமையேற்று நடத்தினீர்கள்? போன்ற வினாக்களை முன்வைத்து, இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் சிலரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரியவருகின்றது. (அ-ம-26)


## வீடு வாடகைக்குண்டு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு மிக அருகில் (இருபாலையில்) 5 அறைகளுடன் கூடிய வாகனத்தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 654 4574

## தேவை

நல்ல இன கறவைப் பால் மாடுகள் தேவை (தரகர் தேவை இல்லை)

தொடர்பு: 076 332 8909

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் விழுபளை வீதியில் வடக்கு நோக்கி 1/2 க் கி.மீ தூரம் நிலப்பரப்பு - 65 தென்னை, தோட்டப் பயிர்செய்கைக்கு உகந்த நிலம். தரகர் தேவை இல்லை.

(CS54627) J-1

077 691 4151, 021 227 0948

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் செல்வமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் பலாலி வீதியில் 18 அடி பாதையுடன் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS24021)

077 229 4985, 077 621 2039

## வீட்டுக் காணி விற்பனைக்கு

சங்கானை வீதி அச்சுவேலி (ஒட்டகப்புலம் மக்கோனா சீர்திருத்தப் பள்ளி அருகில்) 30 பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS54698) J-1

077 458 6442

## நல்லூரில் காணியுடன் வீடு விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் Temple Roadக்கு அருகில் 5.8 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு. மற்றும் Colombo வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசையில் Apartments தனி வீடுகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 968 1340

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **Power weeder** (களை பிடுங்கும்)

6.5 HP டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரங்கள் இப்பொழுது எம்மிடம்.

இது **Greaves** நிறுவனத்தின் ஒரு தயாரிப்பு

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



### ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

## அலுவலர்கள் தேவை

வடமாகாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு வேலைத்தல மேற்பார்வையாளர், படவரைஞர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறைந்தது 3 வருட முன் அனுபவம் தேவை.

(CS/00148) J-1

077 699 9021

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

* யாழ். நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.

* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.

* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக் கழிவில் வழங்கப்படும்.

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல. 158, 193

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CR 42200) V-1

077 165 1729, 07777 305 67, 021 222 8334


## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 03 . 1968



மறைவு 12 . 04 . 2024

### கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்

(தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி - தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம்)

மடடுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் அவர்கள் நேற்று (12.04.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற நடராசா - தேவி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாளினி அவர்களின் அன்புக் கணவரும், அபிநயமேனன், அம்ஸவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம், புனிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயானந்தராஜா, மோகன்ராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.04.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகள் கட்டையாலடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

(CR 42216) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03.10.1983

உதிர்வு 13.04.2020

### அமரர் இராமராசா மயூரன்

(மதன்)

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோப்பாய்)

ஆண்டுகள் நான்கு
கடந்து சென்றும்
எங்கள் மனதில்
மங்காத நினைவுகளாய்
என்றும் நிலைத்திருப்பாய்
அமைதியாக உறங்கும் - நீ
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(CS54714) J-1

பாடசாலை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

சகோதரிகள்,
மைத்துனர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.